**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை : திரு.எஸ்.முருகவேல், பி.ஏ., பி.எல்.,**
**செயலாளர், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**கூடுதல் சார்பு நீதிபதி, தென்காசி (முழு கூடுதல் பொறுப்பு)**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ஆம் நாள் திங்கட்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 23-ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.295/2019 வழக்கில்**
**இடைநிலை மனு எண்.9/2026**

1. அண்ணாதுரை
2. வேல்சாமி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. சிவசுப்பிரமணியன்
2. சுரேஷ்
3. அமுதா
4. வசந்தி
5. முத்தம்மாள்
6. *துரை (இறப்பு)*
7. ராஜம்மாள்
8. அண்ணாமலை (Exonerated)
9. முத்துலெட்சுமி
10. மல்லிகா
11. பாபு
12. பாலாஜி

(4, 5 எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தங்களது பொது அதிகாரம் பெற்ற முகவரான 3 ஆம் எதிர்மனுதார்/3 ஆம் பிரதிவாதி மூலம்)
(ஷை 7, 9, 10 பிரதிவாதிகள் தங்களது பவர் ஏஜெண்டான அண்ணாதுரை மூலம்)

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 27.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, தரப்பினர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் செல்வி. S. வனஜா, திருவாளர். S. சுபசேகர் மற்றும் திருவாளர். M.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.06 19:28:16 +0530

நல்லசிவன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 6 ஆம் எதிர்மனுதார் இவ்வழக்கினிடையே இறந்துவிட்ட நிலையிலும், தரப்பினர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்துவந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உ த் த ர வு**

இம்மனுவானது, தரப்பினர்களுக்குள் ஏற்பட்ட சமரச தீர்வை ஏற்று, அசல் வழக்கில் அதன்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க உத்தரவிடக்கோரி மனுதார் மற்றும் எதிர்மனுதார்களால் சேர்ந்து, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் கட்டளை 23, விதி 2 மற்றும் பிரிவு 151 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:

இந்த அசல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் மத்தியில், மனுதார்கள் மற்றும் எதிர்மனுதார்கள் மேற்படி சொத்துக்கள் சம்பந்தமாக தங்களுக்கு இடையேயான பிரச்சினையை சுமூகமாக பேசி தீர்த்து, இம்மனுவில் கண்டுள்ள ராஜினாமா ஷரத்துக்களின்படி பேசி தீர்த்துக் கொண்டனர். வழக்குச் சொத்தை தரப்பினர்கள் தங்களுக்குள் சமரசமாக பிரித்துக்கொண்டதை விளக்கும் மாதிரிவரைபடமும் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுவை அனுமதிக்கக் கோரப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சினை என்னவெனில், *இம்மனு அனுமதிக்கத்தக்கதா?* என்பதேயாகும்.

4. இம்மனுவின்பேரில் இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.06 19:28:22 +0530

5. கற்றறிந்த தரப்பினர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிடும்போது, இந்த அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது, இரு தரப்பினர் இடையே சமரசம் ஏற்பட்டு, அதனடிப்படையில் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்களை பிரிவினை செய்துள்ளதாக இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், அதனடிப்படையில் இந்த அசல் வழக்கை முடிவு செய்யுமாறு வாதிடப்பட்டது.

6. **தீர்வு**

இந்த மனுவானது, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் கட்டளை 23, விதி 2 மற்றும் பிரிவு 151 ன்படி, தரப்பினர்கள் இருவரும் அசல் வழக்கில் சமரசம் செய்து கொண்டதால், அதை ஏற்றுக்கொண்டு தீர்ப்பாணை வழங்குமாறு கூறப்பட்டுள்ளது. இதைப் பொறுத்து 6 ஆம் பிரதிவாதி துரை இறந்துவிட்ட நிலையில், 8 ஆம் பிரதிவாதி, இந்த வழக்கில் Exonerate செய்யப்பட்டுள்ளார். மேலும், இந்த மனுவில், மனுதார்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டதாகவும், அதன்படி, வழக்குச் சொத்துக்களை சமரசமாக பிரித்துக்கொள்வதற்கு இரு தரப்பிலும் முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1, 2 இலக்கச் சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த 1, 2 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து இந்த மனுவில் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

***ராஜினாமா ஷரத்துக்கள்***

*1. இந்த ராஜினாமாவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வரைபடத்தையும் இதன் ஒரு பாகமாக வாசித்துக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது.*

*2. இத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ள ABEFGHIJKD பகுதியானது இதன் 1 வது தபசிலாக விவரிக்கப்பட்டுள்ளது. வரைபடத்தில் ABCD என்பது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அது இதன் 2 வது தபசிலாக*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.06 19:28:27 +0530

***விவரிக்கப்பட்டுள்ளது. ஷை இடத்தை இந்த உபயவாதிகள் பொதுப்பாதையாக உபயோகித்துக்கொள்ள இந்த வாதிகளால் விட்டுக் கொடுக்கப்படுகிறது.***

***3. அதுபோல் வரைபடத்தில் FGJD என்பது 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அதில் வரைபடத்தில் CC1KD பகுதியான இதன் 3வது தபசில் 1வது அயிட்டமாக விவரிக்கப்பட்டுள்ள இடத்தை இந்த உபயவாதிகள் பொதுப்பாதையாக உபயோகித்துக்கொள்ள இந்த 1 முதல் 5 பிரதிவாதிகளால் விட்டுக் கொடுக்கப்படுகிறது.***

***4. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இதன் 2வது தபசில் ABCD இடத்தை பொது பாதையாக விட்டுக் கொடுப்பதால் இந்த பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட இதன் 3வது தபசில் 2வது அயிட்டத்தை மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள C1KJJ1 பகுதியை வாதிகளுக்கு விட்டு கொடுக்கிறார்கள்.***

***5. எனவே இந்த 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பகுதியில் இந்த 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கோ அவர்களது வாரிசுகளுக்கோ எவ்வித பாத்தியதையும் இல்லை.***

எனவே, மேற்கண்ட சொத்துக்களை, மனுதார்கள்/வாதிகள் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் பிரித்துக் கொண்டு, அதனடிப்படையில் தீர்ப்பாணை வழங்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளதால், இரு தரப்பினர்களும் சமரசம் செய்துள்ள நிலையில், மேற்கண்ட சமரச ஷரத்துக்களின் அடிப்படையில், வழக்குச் சொத்துக்களை அவ்வாறே தரப்பினர்கள் பிரிவினை செய்துகொள்ள ஏதுவாக, இந்த மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

7. இறுதியாக, தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.06 19:28:34 +0530

செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ஆம் தேதியன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.06 19:28:41 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி.**
**(முழு கூடுதல் பொறுப்பு)**

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> இல்லை

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.04.06 19:28:49 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி.**
**(முழு கூடுதல் பொறுப்பு)**

---

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**அசல் வழக்கு எண்.295/2019–ல்**
**இடைநிலை மனு எண்.9/2026**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள் 06.04.2026**

---